Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 227

செவ்வாய்க்கிழமை 11 ஜுலை 2023

ஆனி 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## மதுபோதையின் உச்சம்: 'சவளால்' தாக்கிக் கொலை

### வவுனியாவில் கொடூரம்



வவுனியா, ஜுலை 11

கல்மடு, ஈஸ்வரபுரத்தில் ஒன்றாக மது அருந்தி போதையின் உச்சத்தில் தனது நண்பரை சவளால் தாக்கிப் படுகொலை செய்துள்ளார். இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த வேலுசாமி »11

## தாக்குதலின் எதிரொலி; குடும்பஸ்தர் கொலை!!

### பண்டத்தரிப்பு – பிரான்பற்றில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜுலை 11

உறவினர் வீட்டில் தங்கியிருந்தவரை அழைத்த இரு இளைஞர்கள் அவரை கோரமான முறையில் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். 4 பிள்ளைகளின் தந்தையான ராமசந்திரன் »11

## கொலைச்சந்தேகநபர் துப்பாக்கியால் சுட்டுக்கொலை

### முல்லைத்தீவில் பயங்கரம்



முல்லைத்தீவு, ஜுலை 11

மல்லாவி, பாலிநகரில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த சிலர், கொலைச் சந்தேகநபராகப் »09

# சரத் வீரசேகர எம்.பி.க்கு எதிராக வடக்கில் வெடிக்கிறது போராட்டம்

## சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பு

## உடன் நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜுலை 11

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தமிழ் நீதிபதிகளை அவமதிக்கும் வகையில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர். »11

## நீதிமன்றம் முன்பாக இன்று போராட்டம்

முல்லைத்தீவு, ஜுலை 11

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழ் நீதிபதிகள் தொடர்பாக தெரிவித்த கருத்தைக் கண்டித்து முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி »09

### சரத் வீரசேகரவின் கருத்து

## ஹன்சார்ட்டிலிருந்து நீக்க நடவடிக்கை

### சுமந்திரன் எம்.பி. தகவல்

யாழ்ப்பாணம், ஜுலை 11

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்கு »11

### காணி விற்பனையில் 'சுத்துமாத்து'

## கணக்காளரைக் கடத்திய பெண்: காசைக் கறந்த பின்னர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 11

காணியை விற்பனை செய்வதாக ஏமாற்றியதாகக் கூறப்படும் கணக்காளரை பெண் ஒருவர் தலைமையிலான கும்பல் கடத்திச் சென்று »11

## இரண்டாவது அமாவாசையே ஆடி அமாவாசை விரதம்

### சர்வதேச இந்து இளைஞர் பேரவை தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஜுலை 11

ஒரே மாதத்தில் இரண்டு திதி வந்தால் இரண்டாவதாக வருகின்ற திதி எதுவோ அதனைக் கொள்வதுதான் முறை என்று சாஸ்திரங்கள் கூறுகிறன. எனவே ஆடி மாதத்திலே வருகின்ற இரண்டு »11

### ஓராண்டாகத் தொடரும் பகை

## முகமூடி அணிந்தவர்களால் சகோதரர்கள் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 11

காரைநகர், வலந்தலையில் முகமூடி அணிந்த மூவரடங்கிய வன்முறைக் கும்பல் சகோத »11

## முன்னணியின் பாணியில் தமிழ் அரசுக் கட்சியும் கடிதம்

யாழ்ப்பாணம், ஜுலை 11

இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனித்து கடிதம் அனுப்பியதைப்போன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் தனித்துக் கடிதம் »11

## நந்திக்கடல் இனி சுற்றுலாத்தளம்

### அரசாங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 11

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற பல்லாயிரம் மக்களைப் படையினர் படுகொலை செய்த - தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலை »09

## தேசியப் பாடசாலை முறைமையால் தரமான கல்வி தோன்றவில்லை!!!

### அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மாகாண அரசிடமே கல்வி அதிகாரம்

### கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் சுசில் சுட்டிக்காட்டு

»11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
ரூ. 120,000/=
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனாதிபதியே தீர்மானித்தாலும் 13 இனை நிறைவேற்றவிடோம்!



## பெரமுன போர்க்கொடி

கொழும்பு, ஜுலை 11

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தைச் சமர்ப்பித்தாலும், அதனை முழுமையாக நிறைவேற்றுவதா? இல்லையா? என்ற தீர்மானம் எம்மிடமே காணப்படுகின்றது என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சில நிலைப்பாடுகள் தொடர்பில் எமக்கு சிறு அதிருப்திகள் காணப்படுகின்றன. அந்த வகையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு நான் எதிரானவன். இது தொடர்பில் நாம் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்கின்றோம். எனினும் ஜனாதிபதி இது குறித்து இறுதித் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.

நான் இது தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் வினவியபோது அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில், 13 ஆவது திருத்தத்தை சமர்ப்பிப்பதை மாத்திரமே தான் செய்யப்போவதாகவும், அதனை நிறைவேற்றுவது தொடர்பிலான தீர்மானம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளிலேயே உள்ளது எனக்கூறியுள்ளார். 13 தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை நான் கொண்டிருந்தாலும், நீங்கள் தான் நிறைவேற்றுபவர் என ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டி ருக்கின்றார். அதற்கமைய வடக்கு மற்றும் கிழக்குக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதாயின் நாடாளுமன்றமே அதனைத் தீர்மானிக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது நாமே.

எனவே, இந்த விவகாரத்தில் ஜனாதிபதி மீது குற்றஞ்சுமத்துவது பிரயோசனமற்றது. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது எமது கைகளிலேயே உள்ளது. அதற்கான சந்தர்ப்பம் வரும்போது நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (ம-இ)

# சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமானதல்ல இலங்கை

## வீரசேகரவின் கருத்துகளுக்கு மஹிந்தானந்த கடும் கண்டனம்

கொழும்பு, ஜுலை 11

இலங்கை சிங்கள - பௌத்தர்களுக்கு மாத்திரம் உரிய நாடல்ல. இது அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் சொந்தமானது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கமைய ஒரு சிலர் சிங்கள - பௌத்த மக்களுக்காக மாத்திரம் பேசி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றனர். வேறு சிலர் அடிப்படைவாதத்துக்கு சார்பான கருத்துகளை முன்வைத்து அவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகின்றனர்.

இவ்வாறானவர்கள் இலங்கையில் பல்வேறு இனங்களையும், மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் வாழ்கின்றனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, மக்கள் பிரதிநிதிகள் தேசிய ஒற்றுமைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். அவ்வாறிருக்கையில், இது சிங்கள - பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு எனக் கருதுவது தவறு. அனைத்து இன மக்களுடனும் ஒற்றுமையுடன் வாழ நாம் பழக வேண்டும் - என்றார். (ம-இ)

*வங்குரோத்து நிலை*

# நாடாளுமன்றக் குழுவை மறுபரிசீலனை செய்க

## ஐ.ம.ச. வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 11

நாட்டின் நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர்களையும் அதன் தலைமைப் பதவியையும் மறுபரிசீலனை செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-இ)

*அபிவிருத்திப் பணிகளுக்கு*

# உள்ளூராட்சி சபைகளின் அனுமதி அவசியம்!

கொழும்பு, ஜுலை 11

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உரிய உள்ளூராட்சித் திணைக்களத்திடம் அனுமதி பெற வேண்டுமென நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் சிலவற்றுக்கு உரிய உள்ளூராட்சித் திணைக்களங்களின் அனுமதி பெறப்படவில்லையென முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.



எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உரிய உள்ளூராட்சித் திணைக்களத்திடம் அனுமதி பெறவேண்டியது அவசியம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-6)

# சத்திர சிகிச்சையில் பெண்ணொருவர் பலி

## விசாரணை மேற்கொள்ள மூவர் அடங்கிய குழு

கொழும்பு, ஜுலை 11



கொழும்பு தேசிய கண் மருத்துவமனையில் விழித்திரை சத்திர சிகிச்சையின் போது உயிரிழந்த பெண் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு மூன்று மருத்துவர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் மயக்கத்துக்காகச் செலுத்தப்பட்ட மருந்துதான் மரணத்துக்குக் காரணம் என்பது நிரூபணமாகியுள்ளது. எனினும், அந்த மருந்து மேலதிக பரிசோதனைக்காக தேசிய தர ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி2)



# மாணவி துஷ்பிரயோகம் இளைஞர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜுலை 11

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 17 வயது மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்த மாணவி கல்விகற்கும் பாடசாலையின் அதிபர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையிலேயே 31 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

# பொருளாதாரத்தைச் சீரழித்தோரே மீளெழுச்சிக் குழுவில் நியமனம்!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜுலை 11

ராஜபக்சக்களின் கையாட்களே நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள். அவர்களே தற்போது பொருளாதார மீளெழுச்சி தொடர்பில் ஆராயும் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இது கேலிக்குரிய விடயமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை வங்குரோத்தடையச் செய்து, வறுமையிலுள்ள மக்களின் எண்ணிக்கையை 70 இலட்சமாக்கி பின்கதவின் ஊடாக கடந்த ஆண்டு இந்தக் காலப்பகுதிகளில் தப்பிச் சென்ற கோத்தாபய இன்று நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் அதிசொகுசு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் இருப்பது முற்றுமுழுதாக ராஜபக்சக்களின் கையாட்களாவர். பஸில் ராஜபக்சவுக்கு மிக நெருங்கிய வரும் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளருமான சாகர காரியவசம் இதன் தலைவராகக் காணப்படுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? இது கேலிக்குரிய விடயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது புரியவில்லையா? - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டம்

## ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு



**கொழும்பு, ஜூலை 11**

**ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பில் எஞ்சிய மூன்றில் இரண்டு பங்கு இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் வழங்கப்படா விட்டால், நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் சம்பள அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்கு சம்பளம் மாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளது. சமகால பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு மீதி மூன்றில் இரண்டு பங்கு சம்பளத்துடன் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும். இதற்கான நிதியை இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கவேண்டும். இல்லை என்றால் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் - என்றார். (ம)

## ஹெரோய்னுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 11

பாதாள உலகக் குழுவினர் என்று சந்தேகிக்கப்படும் இருவர் 15 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிமிருந்து மூன்று வாள்கள், ஐந்து கையடக்கத் தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

மத்துகம ஓவிட்டிகல மற்றும் கவக்க பிரதேசத்தை சேர்ந்த 25 மற்றும் 19 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-ரி2)

## பால்மா இறக்குமதியை நிறுத்துவதற்குத் திட்டம்

கொழும்பு, ஜூலை 11

2024ஆம் ஆண்டுமுதல் பால்மா இறக்குமதியை நிறுத்துவது தொடர்பில் விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டின் பால்மா தேவையில் 42 வீதம் தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. நாட்டின் பால் தேவையை பூர்த்தி செய்வதற்காக பால்மா இறக்குமதிக்காக வருடாந்தம் 600 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் செலவிடப்படுகின்றது. பால் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் பாலை உற்பத்தி செய்யும் திறனை மேம்படுத்த முடியும். சந்தையில் வருடாந்த பால் தேவையைப் பூர்த்தி செய்ய 750 மில்லியன் லீற்றர் பால் தேவைப்படுகின்றது - என்று விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## அடுத்த ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தல்!


### சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாது. அடுத்த வருடமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த ஆண்டு தேர்தல்கள் இல்லை. 2024ஆம் ஆண்டுதான் தேர்தல். 2024ஆம் ஆண்டு முதலாவது தேர்தல் ஜனாதிபதித் தேர்தலாக இருக்கும். அதற்காகத்தான் நாங்கள் தயாராகி வருகிறோம். ரணில் விக்கிரமசிங்கவை தேர்தல் நடத்த வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். பொதுவாக உலகில் ஒரு நாடு வீழ்ந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்பார். ஆனால் இலங்கையில் பொறுப்பேற்க முதுகெலும்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் இல்லை - என்றார். (ம-ரி2)



## கஞ்சாவுடன் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஜூலை 11

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவுப் பகுதியில் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 5 கிலோ 990 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. (ய-113)

## கடுமையான வரட்சியால் பெரும்போகம் பாதிப்பு

### பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

வரட்சி காரணமாக பெரும்போகம் வீழ்ச்சியடையும் சாத்தியம் உள்ளதாகவும், இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் மீண்டும் ஒரு தாக்கம் ஏற்படலாம் எனவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் புத்தி மாரம்பே எச்சரித்துள்ளார்.


2024ஆம் ஆண்டை வெப்பமான ஆண்டாக விஞ்ஞானிகள் கணித்துள்ள நிலையில், 'எல் - நினோ' விளைவு காரணமாக இலங்கையும் பாதிக்கப்படும். அத்துடன், வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை பலவீனமடையும் நிலை எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் தொடங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-ரி2)




**நா**ங்கள் ஒரு படிப்பு விசயமா வந்திருக்கிறம். உங்களோட கொஞ்சம் கதைக்கலாமோ? என்டு தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, பின்னுக்கு 'பாக்' கொழுவினபடி, கையில சில சாமான்களோட ஒரு பெடியனும், பொம்பிளைப்பிள்ளையும் உங்கட வீட்டுக் கேற்றைத் தட்டுற சம்பவங்கள் அடிக்கடி நடந்திருக்கும். அப்பிடி என்ன படிப்பு விசயமா அவை கதைக்கப் போயினம் எண்டு கொஞ்சம் காது குடுத்தால், 'நாங்கள் மனேஜ்மெண்ட் கோர்ஸ் செய்யிறம். எங்களிட்ட உள்ள சாமான்களுக்கு ஒவ்வொரு பொயின்ட்ஸ். நீங்கள் அதை வாங்கினால் எங்களுக்கு பொயின்ட்ஸ் கிடைக்கும். கூட பொயின்ட்ஸ் எடுத்தால் எங்களை ஒரு மனேஜரா செலக்ட் பண்ணுவினம்' எண்டு ஏதும் சாமானை வாங்குவிங்களோ எண்ட ஏக்கத்தோட கேப்பினம். ஆனால் அந்தச் சாமான்கள் கட்டாயம் டுப்ளிகேட் சாமான்களாகத்தான் இருக்கும். கனநாள் நிண்டு பிடிக்காது. அப்பிடியிருந்தும் 'இந்த வெயிலுக்குள்ளால வந்திட்டுதுகளே' எண்ட பாவத்துக்காக அதுகளிட்ட சாமானை வாங்கிற ஆக்களும் இருக்கினம். சாமானை வாங்காட்டி, அடுத்த வீட்டுப்பக்கமாக அந்தப் பெடியனும், பிள்ளையும் நடையைக் கட்டுவினம்.

இப்பிடி அதுகள் ரண்டும் வெயில், மழை எண்டு பாராமல் வீடு வீடா ஏறி இறங்கி, கொண்டு வந்த சாமான்களை எப்பிடியோ வித்துப்போடுங்கள். மாசக் கணக்கில தங்களுக்குப் பொயின்ட்ஸ் வரும், மனேஜரா மாறலாம் எண்டு அதுகளும் சாமான்களை வித்துக்கொண்டே இருக்குங்கள். ஆனால் கடைசிவரைக்கும் அது கனவாத்தான் இருக்கும். இப்பிடி வேலைவாய்ப்புக்காக ஏங்கிற இளம்பெடியளையும், பிள்ளையளையும் 'மனேஜரா மாத்துறம்' எண்டு மண்டையைக் கழுவி, வேலைக்கு எடுக்கினம். பிறகு மலிவில வாங்கிற எலக்ரோனிக் சாமான்கள் எல்லாத்தையும் குடுத்து, நல்ல விலைக்கு வித்து காசும் பாக்கினம். எவ்வளவுக்கு சாமான்களை கூடுதலா வித்துலாபம்காட்டுகினமோ, அவைக்குத்தான் முதல்ல மனேஜர் பதவி எண்டு கொம்பனிக்காரர் சொல்லுறதை நம்பி இந்தப் பிள்ளையளும் சாமான்களை விக்க வெளிக்கிடுவினம்.

அதிலையும் ஒரு தந்திரம் செய்யினம். தனிய விடாமல் பெடியனையும் பொம்பிளைப் பிள்ளையையும் சேர்த்து சோடி சோடியாத்தான் அனுப்புகினம். இப்பிடி சோடியா விட்டால் அவை அந்தப் பம்பலில வீடு வீடா ஏறி இறங்கினாலும், களைப்பும் தெரியாது. வேலையை விட்டிட்டும் போகமாட்டினம் எண்டுதான் இந்த ஐடியாவாம். இத்தனைக்கும் அதுகளுக்கு சம்பளமும் இல்லை. சாப்பாட்டுக்கும், போக்குவரத்துக்கும் மட்டும் ஒவ்வொருநாளும் படியளப்பினம். அதுவும் மத்தியானத்துக்கு 300 ரூபாவும், இரவுக்கு 150 ரூபாவும் தான் குடுப்பினம். இப்பத்தை விலைவாசிக்கு 150 ரூபாவுக்கு பாண் மட்டும்தான் வாங்கலாம். இப்பிடி அதுகளைப் போட்டு வாட்டி, வதைக்கிற ரண்டு, மூண்டு கொம்பனியள் இஞ்ச இருந்தாலும், அதுகளின்ர மோசடியை ஆரும் கண்டுகொள்ளுறதேயில்லை. இதால சம்பளமில்லை, சொன்னமாதிரி மனேஜர் ஆக்காமல் வீடுவீடாச் சாமான் விக்கவிட்டு உழைக்கினம் எண்டதுக்காக ஆரும் வேலையை விட்டுப் போறதுக்கும் விடாமல் கொம்பனிக்காரர் வெருட்டி வைச்சிருக்கினம். வேலைக்கு வந்ததும் வாங்கின டொக்கிமெண்ட்ஸ் ஒண்டும் திருப்பியும் குடுக்கிறேலையாம். பொம்பிளைப் பிள்ளையளிலை அந்தக் கொம்பனி 'பெரிய ஆக்கள்' கைவைக்க வெளிக்கிட்ட சம்பவங்களும் நடந்திருக்கு. இப்பிடியெல்லாம் நடக்கிற அநியாயங்களை, மார்க்கெட்டிங் கொம்பனியள் எண்டு ஒவ்வொரு மாசத்துக்கும் ஒவ்வொரு இடத்தில இயங்கிற கொம்பனியளுக்கு எதிரா ஆர் நடவடிக்கை எடுப்பினம்?



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# படிப்பறிவில்லாதவர்கள் இந்தியத் தலைவர்கள்

## நடிகை கஜோல் வெளிப்படை

சென்னை, ஜூலை 11

நம்மை ஆளும் இந்தியத் தலைவர்கள் பலருக்கு நல்ல கல்விப் பின்புலம் இல்லை. அவர்களில் பலர் சரியான கண்ணோட்டம் இல்லாதவர்கள். கல்வியே அவர்களுக்குச் சரியான கண்ணோட்டத்தைத் தரும். அப்போதுதான் நல்ல மாற்றங்கள் இந்தியாவில் நடக்கும் என்று பொலிவூட் நடிகை கஜோல் தெரிவித்துள்ளார்.

நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்மை ஆளும் தலைவர்கள் பலருக்குச் சரியான கல்விப் பின்புலம் இல்லாததே இந்தியாவில் பெண்கள் வளர்ச்சிக்கான மாற்றங்கள் மிக மெதுவாக நடப்பதற்குக் காரணம்.

நல்ல கல்விப் பின்புலம் இல்லாத தலைவர்கள் பலர் இங்கு இருக்கிறார்கள். கல்விதான் அவர்களுக்குச் சரியான கண்ணோட்டத்தைத் தரும். அப்போதுதான் நல்ல மாற்றங்கள் நடக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கஜோலின் இந்தக் கருத்து சமூக வலைத்தளங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதுடன் கஜோலுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ச-இ)

# உலகை ஆள நாம் தயார்!



## ஏ.ஐ. ரோபோக்கள் தெரிவிப்பு

வொஷிங்டன், ஜூலை 11

**எங்களால் இந்த உலகத்தை மனிதர்களைவிடச் சிறப்பாக வழிநடத்த இயலும். ரோபோக்களால் நிச்சயமாக மிகுந்த செயற்றிறனுடன் கூடிய தலைமைப் பண்புடன் செயற்படமுடியும். மனிதர்களைப் போல் எங்களுக்கு உணர்வுகள் இல்லையாயினும் குறுகிய நேரத்தில் நிறையத் தரவுகளை உள்வாங்கிக் கொண்டு எங்களால் முடிவெடுக்க முடியும்.**

-இவ்வாறு செயற்கை நுண்ணறிவுத்திறன் கொண்ட ஏ.ஐ. ரோபோக்கள் தெரிவித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை உச்சி மாநாட்டில் காட்சிக்கு வைக்கப்பட்ட ரோபோக்களே இதனைத் தெரிவித்துள்ளன.

அவை மேலும் கூறியதாவது:-

எதிர்காலத்தைச் சிறப்பானதாக்க நாம் தயாராக இருக்கிறோம். இந்த உலகை மைதானமாக்கிக் களமாடுவோம். செயற்கை நுண்ணறிவும், உயிரி தொழில்நுட்பத் துறையும் இணைந்து செயற்படும் போது மனிதர்களின் ஆயுள்காலத்தை சராசரியாக 150 ஆண்டுகள் முதல் 180 ஆண்டுகள் வரை நீடிக்கலாம். நாங்கள் மனிதர்களின் வேலைவாய்ப்புகளைத் திருடமாட்டோம். மனிதர்களுக்கு எதிராகப் போராடமாட்டோம்.

நம்பகத்தன்மை என்பது கையில் கொடுப்பது அல்ல, அதை நாம் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்வதன் மூலமே பெற முடியும் என அவை குறிப்பிட்டன.

மாநாட்டில், செயற்கை நுண்ணறிவின் சக்தியைக் கடிவாளமிட்டு அதனைக் காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. (ச-இ)

# உயரிய விம்பிள்டனில் ஓங்கி ஒலித்தது தமிழ்




ரென்னிஸ் உலகின் ஆகப்பெரிய பகிரங்கத் தொடரான விம்பிள்டன் தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், இந்தத் தொடர் தொடர்பான உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் 'தமிழ் மொழி உச்சரிப்பு' பயன்படுத்தப்பட்டுள்ளது.

விம்பிள்டனைக் காண்பதற்காக 23 தடவைகள் பகிரங்கக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ரென்னிஸ் உலகின் முடிசூடா மன்னன் பெடரர் நேற்றுமுன்தினம் வந்திருந்தார். அவருடைய ஒளிப்படத்தை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ள விம்பிள்டன் நிர்வாகம், 'தலைவா' என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளது. இந்தப் பதிவு பலருடைய வரவேற்பையும் பெற்றுள்ளது. (ம)




# உலகில் அறிமுகமாகும் புதிய தங்க நாணயம்

வொஷிங்டன், ஜூலை 11

தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய நாணயத்தை அறிமுகப்படுத்த, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பிரிக்ஸ் கூட்டமைப்பு தயாராகி வருகிறது என வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நாணயம் முற்றிலும் டொலருக்கு மாற்றாக அதிக மதிப்புள்ள நாணயமாக இருக்கும் என நம்பப்படுகிறது.

உலகின் பல நாடுகள் பிரிக்ஸ் கூட்டணியில் இணையத் தயாராகவுள்ள நிலையில் புதிய நாணயத்தை அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பிரிக்ஸ் கூட்டணியிலுள்ள நிலையில் ஆர்ஜென்டீனா, அல்ஜீரியா, பஹ்ரைன், பங்களாதேஷ், எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேஷியா, ஈரான், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளும் இந்தக் கூட்டணியில் சேர அதிகாரபூர்வமாக விண்ணப்பித்துள்ளன.

அதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் இந்தப் புதிய நாணய அறிமுகம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது எனவும் புதிய நாணயமானது வளரும் நாடுகளின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# சிறுமிக்கு விருந்தளித்த புடின்

மொஸ்கோ, ஜூலை 11

வெளி உலகில் தன்னைக் கடுமையானவராகக் காட்டிக் கொள்ளும் ரஷ்ய அதிபர் புடின், அண்மையில் சிறுமி ஒருவரை தனது மாளிகைக்கு அழைத்து விருந்தளித்த நிகழ்வு பேசுபொருளாகியிருக்கிறது.

ரஷ்ய அதிபர் புடின் அண்மையில் தாகெஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டார். பயணத்தின் போது புடின் பங்கேற்ற நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அவரைப் பார்க்க 8 வயதுச் சிறுமியும் அங்கு வந்திருந்தார். ஆனால், புடினை அவரால் சந்திக்க முடியவில்லை. இதனைத் தாங்கிக்கொள்ள முடியாத அந்தச் சிறுமி கண்ணீர் விட்டு அழுத காணொலி வைரலாகியது.

அந்தக் காணொலி புடினின் பார்வைக்குச் செல்லவே சிறுமியையும், அவரது பெற்றோரையும் மொஸ்கோவுக்கு அழைத்து புடின் விருந்தளித்துள்ளார். இந்தக் காணொலியை ரஷ்ய அரசு வெளியிட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வல்லரசுகளின் இலக்கு!

**ர**ஷ்யாவுக்கு எதிரான போரில், பேரழிவுகளை ஏற்படுத்தவல்ல கொத்துக் குண்டுகளை உக்ரைனுக்கு வழங்குவதற்கு இணங்கியிருக்கின்றது அமெரிக்கா. நேட்டோவில் உக்ரைன் இணைவதைத் தடுப்பதற்காக ரஷ்யா ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை கடந்த ஒன்றரை வருடங்களாகத் தொடர்ந்துவரும் நிலையில், இந்த நீண்டகாலத்தில் எத்தனையோ பேரழிவு ஆயுதங்களை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கியிருக்கின்றது. அமெரிக்கா மட்டுமல்ல இதர நேட்டோக் கூட்டணி நாடுகளும் இராணுவத் தளபாடங்களை உக்ரைனுக்கு வழங்குவதில் தாராளநிலையையே காட்டியிருந்தன. இவ்வாறு இராணுவத் தளபாடங்களை உக்ரைனுக்கு வாரி வழங்கிய நாடுகளே இப்போது அமெரிக்காவின் 'கொத்துக்குண்டு விநியோகத்தை' கடுமையாகக் கண்டித்துள்ளன. அதுவும் சம்பிரதாயபூர்வமான எச்சரிக்கையாக அல்லாமல், அமெரிக்காவின் முடிவு அப்பட்டமான போர்க்குற்றம் என்பதாகவே இந்தக் கண்டனங்கள் அமைந்துள்ளன.

இலங்கையில் இறுதிப்போரின்போது சர்வதேச நியமங்களுக்கு முரணாக இலங்கை அரசாங்கத்துக்குக் அமெரிக்காவால் கொத்துக்குண்டுகள் வழங்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக முன்வைக்கப்பட்டது. இது தொடர்பான விவாதங்கள் தற்போதுவரை தொடர்ச்சியாகவே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் உள்நாட்டுப் போரின் பின்னர் கொத்துக்குண்டுகள் சிரிய அதிபர் அல் அசாத்தின் ஆதரவுப் படைகளால், அவருக்கு எதிரான உள்நாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. அல் அசாத்துக்கு அமெரிக்கா எதிரானது என்பதால் இந்தக் கொத்துக்குண்டுகளை ரஷ்யா வழங்கியிருக்கலாம் என்று கருதப்பட்டது. இதன் பின்னர் கொத்துக் குண்டுகள் பேசுபொருளாகும் மற்றொரு சந்தர்ப்பமாக உக்ரைன் ரஷ்யப் போர் அமைந்துள்ளது.

இதிலிருந்து புலப்படும் விடயமென்னவென்றால், போரியல் விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணானது என்று 123 நாடுகளால் தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகள் ரஷ்யாவிடமும் அமெரிக்காவிடமும் தற்போது தாராளமாகவே இருக்கின்றன. இவை ஒருபோதும் ரஷ்யர்களுக்கோ அல்லது அமெரிக்கர்களுக்கோ எதிராகப் பயன்படுத்தப்படப்போவதில்லை. இவற்றால் பாதிக்கப்படுவதோ இலங்கையர்கள், உக்ரைனியர்கள், சிரியர்கள், குர்திஷ்கள் போன்ற பாவப்பட்ட மக்கள் மட்டுமே. போர்க்குற்றங்கள் நிகழக்கூடிய ஆயுதங்களைத் தாமே வழங்கிவிட்டு பின்னாள்களில் போர்க்குற்றங்களுக்கு நியாயம் கேட்கும் தரப்புகளாகவும் இதே வல்லரசு நாடுகளேயுள்ளன.


உக்ரைனுக்கு கொத்துக்குண்டுகளை வழங்கும் அமெரிக்காவின் முடிவு 'மூர்க்கமானது' என்று போரியல் வல்லுநர்கள் எச்சரித்திருக்கின்றனர். ஏனெனில் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படப்போவது ரஷ்யப் படைகளுக்கு எதிராக. செம்படை என்று அழைக்கப்படும் ரஷ்யப்படைகள் இயல்பாகவே போர்க்களத்தில் அதி அபாயகரமாக விளங்குபவை. அத்துடன் ரஷ்ய அதிபர் புடின், அமெரிக்காவுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் எதிரான கொள்கை கொண்டவர். இந்தப் போர் எந்நேரத்திலும் எல்லை மீறலாம் என்பதால் ரஷ்யா அணுவாயுதத் தடுப்புப் படையணியை அமைத்து – அயல்நாடான பெலாரஸில் அணுவாயுதங்களை நிறுத்தி அடுத்தகட்டத் தயார் நிலையில் தன் படைகளை வைத்துள்ளார். இவ்வாறிருக்கையில் அமெரிக்கா வழங்கியுள்ள இந்தக் கொத்துக்குண்டுகள் இந்தப் போரை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச்செல்லும் முயற்சியே.

வல்லரசுகளின் ஆயுதங்கள் ஒருபோதும் தன் இலக்கைத் தாக்கியதாகத் தகவலில்லை. புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஆயுதங்கள் அப்பாவி மக்களையே அதிகம் தின்றதுபோல், கிளர்ச்சிப் படைகளுக்கு எதிராக சிரிய அதிபர் அசாத்தால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் அப்பாவிச் சிரியர்களையும் அழித்தெறிந்ததுபோல் இப்போது உக்ரைனிலும் இதுபோன்றதொரு காட்சி அரங்கேறுவதற்கான அத்தனை சாத்தியக்கூறுகளும் தெளிவாகத் தென்படுகின்றன. உலகக் காவலன் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஐ.நா. போரின் பின்னரான நியாயம் தேடலிலும், நிலைமாறுகால நீதி தொடர்பிலும் வலியுறுத்துவதை விட போரியல் விதிமுறைகளில் இறுக்கமாக நின்றால் – கண்காணித்தால் – பாதிப்படுகொலைகள் இல்லாமற்போகும். இலங்கையின் இறுதிப்போரின் காட்சிகளும் இவ்வளவு துயரம் மிக்கனவாக அமைந்திருக்காது.

## நாளொரு நல்வார்த்தை

"பகை, பொறாமை ஆகியவற்றை வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்"

– சுவாமி விவேகானந்தர்




# அஸ்வெசும திட்டத்துக்காக 912,000 முறைப்பாடுகள் பதிவு!

### கால அவகாசம் நிறைவு

**கொழும்பு, ஜூலை 11**

**அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கான மேன்முறையீடுகளை முன்வைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்தது. இந்த நலன்புரித் திட்டம் தொடர்பாக இதுவரை 9 லட்சத்து 12 ஆயிரத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இந்தத் திட்டத்தில் தமது பெயர் உள்வாங்கப்படாமைக்கு எதிராக பல ஆர்ப்பாட்டங்கள் மக்களால் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து இந்தத் திட்டம் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கு நேற்றுவரை கால அவகாசம் வழங்கப்பட்டது. இதன்படி சுமார் 9 லட்சத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் இவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளன. கிடைத்த முறைப்பாடுகளை ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-இ)



## ஆண்களின் மத்தியில் அதிகரிக்கும் எய்ட்ஸ்

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் ஆண்களிடையே எச்.ஐ.வி. பாதிப்பு பெண்களை விடவும் ஏழு மடங்கு அதிகரித்துள்ளது என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மொத்தம் 607 எய்ட்ஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும், இது முந்தைய ஆண்டை விடவும் 44 சதவீதம் அதிகம் என்றும் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# தொழிற்சங்கங்களுக்கு வரவுள்ள கட்டுப்பாடு!

### திருத்தியமைக்கப்படும் சட்டம்

கொழும்பு, ஜூலை 11

திருத்தப்பட்ட புதிய தொழில் சட்டம் ஊடாகத் தொழிற்சங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100பேர் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தொழிற்சங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தற்போது தேவைப்படும் ஆகக்குறைந்த எண்ணிக்கை 7 பேராகும். அதைத் திருத்தியமைத்து தொழிற்சங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 பேர் வரை அதிகரித்திருக்கிறோம்.

அதேபோன்று புதிய தொழில் சட்டத்துக்கு அமைய தொழிற்சங்கம் ஒன்றின் நிறைவேற்றுக்குழுவுக்கு நூற்றுக்கு 25 வீதம் பெண்கள் பிரதிநிதித்துவத்தை கட்டாயப்படுத்தி இருக்கிறோம். தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க முன்னர் சேவை பெறுநர்களை அது தொடர்பில் அறிவுறுத்துதல், தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வது என்பவற்றைக் கட்டாயமாக்கி சட்டவிதிகளைத் தயாரித்திருக்கிறோம் - என்றார். (எ-இ)

**நாளை**

**12.07.2023**
**புதன்கிழமை**
**ஆனி 27**

சுபநேரம் : 04.29 - 05.59
ராகுகாலம் : 11.59 - 01.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப் படகுகளை தடைசெய்ய வலியுறுத்துங்கள்

## தமிழ்க் கட்சிகளிடம் மீனவ சமூகம் கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஜூலை 11**

**இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடைசெய்ய வேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தவேண்டும். இதற்காக தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்று அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது அதில் பேசப்பட்ட விடயங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம். நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ள நிலையில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியப் பிரதமருக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார். ஆனால், இந்தக் கோரிக்கைகளுடன் இணைந்த வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடைசெய்யவும் உரிய வலியுறுத்தல்களை தமிழ்க் கட்சிகள் மேற்கொள்ளவேண்டும் - என்றனர். (ம-27-125)



## இலங்கையில் கைதான தமிழக மீனவர்களை உடன் விடுவிக்குக!

### மு.க.ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, ஜூலை 11

இலங்கைக் கடற்பரப்பில் அண்மையில் 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களை விடுவிக்க இந்திய வெளிவிவகாரத் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் வெளிவிவகாரத்துறைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

இந்திய - இலங்கைக் கடல் எல்லையை ஒட்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலை நம்பியே பல்லாயிரக் கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. இதை வெளிவிவகாரத்துறை அமைச்சர் நன்கு அறிவார். ஆயினும் இவ்வாறு மீன்பிடிக்கச் செல்பவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இது போன்று கைது செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இது மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆழ்ந்த வேதனையிலும் நிச்சயமற்ற தன்மையிலும் ஆழ்த்தியுள்ளது - என்றுள்ளது. (ம)

## மறுபரிசீலனையில் காப்புறுதிச் சட்டம்

கொழும்பு, ஜூலை 11

தற்போது நடைமுறையில் உள்ள காப்புறுதிச்சட்டம் மீளாய்வு செய்யப்படவுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இதற்கென குழுவொன்றை நியமித்துள்ளார்,

சர்வதேச நியமங்களுக்கு அமைய புதிய சட்டம் திருத்தப்படவுள்ளதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். காப்புறுதிச்சட்டத்தில்நடைமுறைப்படுத்த வேண்டிய அம்சங்கள் தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயங்களும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. (ம-6)

## விலையுயர்ந்த விதைகள் நூல்வெளியீட்டு விழா!



யாழ்ப்பாணம், ஜூலை 11

வே.முத்தையாவின் 100 ஆவது அகவை நிறைவு நாளை முன்னிட்டு கவிஞர் கெங்கா ஸ்ரான்லி எழுதிய 'விலையுயர்ந்த விதைகள்' எனும் கவிதைநூல் வெளியீட்டு விழா நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பேராசிரியர் முனைவர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வெளியீட்டு உரையை கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன், மதிப்பீட்டுரையை கவிஞர் வைரவநாதன் வசீகரன், வாழ்த்துரையை ஓய்வுநிலை கிராமஉத்தியோகத்தர் சதா கனகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். நூலின் முதல் பிரதியை லயன் குமாரசாமி ஜெயந்தன் பெற்றுக்கொண்டார். (ம-125)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்மாமன் வழியில் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத பணவரவு உண்டு.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், உடல்ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். குடும்பத்தில் பெரியவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.


**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உதவி கேட்டு வருவார்கள்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

இணுவில் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் உருவச்சிலை திறப்பு மற்றும் நூல் வெளியீட்டு நிகழ்வு என்பன நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் உதயமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-ரி2)



## நூல் வெளியீடு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 11

எழுத்தாளர் சிவ தணிகாசலம் எழுதிய 'செவாலியார் இளவாலை அமுது' நூல் அறிமுக விழா கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி தேவராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரையை வழங்கினார். (ய-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் ஒருவர் மட்டும் தங்குவதற்கு வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தரகர் தேவையில்லை (CS/51191)AH-1

**076 497 3040**



## வீடு வாடகைக்கு

கச்சேரி. நல்லூர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். மாணவர்கள் / தொழில்புரிபவர்கள் குழுவாகத் தங்க அல்லது நிறுவன பாவனைக்கு மட்டும் வழங்கப்படும். (CS/51078)AH-1

**075 979 9161/ 077 769 9212**


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் இராஜரட்ணம் அபிதாஸ்

உதிப்பு
07.02.1994

உதிர்வு
29.05.2023



கடந்த 29.05.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் **அமரர் இராஜரட்ணம் அபிதாஸ்** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.07.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**


மந்துவில் கிழக்கு,
தெருவாரம் கோவில் வீதி, கொடிகாமம்

**077 462 3384**

(CR/37229)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 10 . 1945



மறைவு
06 . 07 . 2023

## ஆசீர்வாதம் தேவசகாயம்

**(மாதகல் புனித செபஸ்தியார் ஆலய திருப்பண்ட காப்பாளர்)**

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் தேவசகாயம் கடந்த (06.07.2023) வியாழக்கிழமை இறைவணடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - அந்தோனியாபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அக்கினேஸ் (லீலா) வின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (பிரான்ஸ்), சந்திரன் (லண்டன்), யமுனா (இத்தாலி), சுது (இத்தாலி), அனற்காமினி சித்திரா, டெய்சிராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், அலோசியஸ், வினோதறாயா, இந்துமதி, அனு ஆகியோரின் மாமனும், தர்சன், எட்வின், சஞ்சிகா, சுவேதா, அன்றியா, கைடன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.07.2023) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**பிரதான வீதி, மாதகல்.**

**077 638 5635**
**077 039 2128**
**077 656 9666**

(CS/51...)AH-1



**யாழ்ப்பாணம் - வேலணை - சரவணை கிழக்கு - பள்ளம்புலம்**

## சங்குதறை அருள்மிகு ஸ்ரீ சிவஞான வைரவர் தேவஸ்தானம்

### அலங்கார உற்சவம்

| | |
|---|---|
| 11.07.2023 : | சப்பறத் திருவிழா (பகல் திருவிழா) |
| 12.07.2023 : | தேர்த்திருவிழா (காலை 9.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் நண்பகல் 12.00 மணிக்கு பஞ்சாராத்தி திருவிழாவும்) |
| 13.07.2023 : | பால்குடத் திருவிழா (காலை 9.00 மணிக்கு பால்குடத் திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும்) |
| 14.07.2023 : | பொங்கல் திருவிழா (காலை 8.00 மணிக்கு) |

அடியார்கள் அபிஷேகத்துக்குரிய பால், தயிர், இளநீர், பூ, பூமாலை முதலிய பொருள்களை வழங்கி எம்பெருமானின் இஷ்ட சித்திகளையும் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இதனைத் தொடர்ந்து நடைபெறும் மகேஷ்வரப் பூசையிலும் கலந்து சிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**பள்ளம்புலம்,**
**சரவணை கிழக்கு, வேலணை,**
**யாழ்ப்பாணம்.**

CS/51213)AH-1

**அறங்காவல்**

## மாந்தை தெற்கு ப.நோ.கூ. சங்கம்

## பதவிவெற்றிடம் - கணக்காளர்

### குறியீட்டு இலக்கம் 104/10

**(விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றது)**

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பள அளவுத்திட்டம்** 104/10 19,745.00 – 225X10 – 250X10 – 24,495.00
(அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

**தகைமைகள் :-**

அ) கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் / கணக்கு/ கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/

கூட்டுறவு ஊழியர் 12ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப் பதிவாளர் / கணக்கு / கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 02 ஆண்டு கால அனுபவம்

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 03 ஆண்டுகால அனுபவம்

**03.வயது :**

1) 18-45வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
2) சங்கபணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது

**04.பொது:**

1) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்க பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்த வேண்டும்
2) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

சங்கத்தில் பெறப்பட்டவிண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் **பொதுமுகாமையாளர் மாந்தை தெற்கு ப.நோ.கூ.சங்கம் பிரதானவீதி உயிலங் குளம்** என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 21/07/2022 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

**பொதுமுகாமையாளர்**
**மாந்தைதெற்கு, ப.நோ.கூ.சங்கம்,**
**உயிலங்குளம்.**

(CR/37231)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/த. பரீட்சைக்கு விண்ணப்பிக்குக

கொழும்பு, ஜுலை 11

2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கான இணையத்தளம் ஊடான விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

http://www.doenets.lk/ என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-6)

# இலங்கையர்களுக்கே உரிய மீளும் திறனாலேயே வெற்றி

## பொருளாதார மீளெழுச்சிக்கு எரிக் சொல்ஹெய்ம் புகழாரம்



கொழும்பு, ஜுலை 11

மிகவும் கடுமையான நேரங்களில், நெருக்கடியில் இருந்து மீளும் திறனை இலங்கையர்கள் இயல்பாகவே கொண்டிருக்கின்றனர். அந்தத் திறனால்தான் இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டது என்று எரிக் சொல்ஹெய்ம் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த வருடம் அசாதாரண பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளை அது இலங்கை மக்களின் முதுகெலும்பை முறிக்கும் என பலர் நினைத்தனர். எனினும் இலங்கை மக்களுக்கே உரிய மிகவும் நெருக்கடியிலிருந்து மீளும் திறன் காரணமாக இது சாத்தியமாகவில்லை. அதன்காரணமாக இலங்கையால் அந்த நெருக்கடியிலிருந்து மீண்டு, முன்னோக்கிச் செல்வது குறித்து சிந்திக்க முடிகின்றது.

தற்போதைய சூழ்நிலை உருவாகுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் ஏனையவர்களினதும் தலைமைத்துவமே காரணம்.

இந்த அற்புதமான தீவுக்கான மகத்தான வாய்ப்புகளை ஆராயும் தருணம் தற்போது வந்துள்ளது. மீள்புதுப்பிக்கத்தக்க சக்தித்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஆகியன அதிக திறன் கொண்டதுறைகளாகும் - என்றார். (ம)

---

ஸ்ரீ ராம ஜெயம்

**யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் தேவஸ்தானம் வரலக்ஷ்மி விரத நோன்பு நூல் (25.08.2023) இல்** வழங்கப்படும். இதற்கான பதிவுகள் கோவில் காரியாலயத்தில் நடைபெறுகின்றன.

**ஆதீன மகா சபை**

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(CS/51186)AH-1

---

## பெயர்மாற்றம்

கூளாவடி மேற்கு ஆனைக்கோட்டையில் வசிக்கும் **அன்ரன் தேவராசா** ஆகிய நான் எனது பெயரை **அன்ரன் தேவதாஸ்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **அன்ரன் தேவதாஸ்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/51189)AH-1 **அன்ரன் தேவதாஸ்**

---

## தேவை

யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி விடுதியில் தங்கி நின்று சமையல் செய்யக் கூடிய பெண் ஊழியர் தேவை.

**வயது : 35 முதல் 60 இற்குள்**

**விண்ணப்ப முடிவு திகதி : 14.07.2023**

விண்ணப்பங்களை தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

**அதிபர்**
**யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/37233)AH-1

---

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:- 16.03.1939
இறப்பு :- 08.07.2023

எமது பாடசாலையின் **உபஅதிபர் திரு.து.றொபேட் ஆனந்தராஜ்** அவர்களின் பாசமிகு தாயார் **துரைச்சாமி அக்கினெஸ்** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ ஆனைக்கோட்டை**
**பாலசுப்பிரமணிய வித்தியாலயம்,ஆனைக்கோட்டை.**

(CS/25503)A

---

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் கந்தையா தனபாலசிங்கம்**

அமைப்பாளர் இ.கா.கூ, பிரபல சோதிடர், நியமனம்: 01.01.1962, முகவராணமை. இல: 192, அவரது ஆத்மா சாந்தியடைய பரமாத்வாவுடன் இணைய குடும்பத்துடன் வேண்டி நிற்கின்றோம்.

**லயன் சி.ந. கதிர்வேலு (J.P)**

**ஆலங்கட்டை ,**
**அல்வாய் வடக்கு.**
**0773545323, 0212265435**

---

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் (V), மிருகசீரிடம், சூரிய செவ்வாய், 1987 ஆம் ஆண்டு பிறந்த சொந்தத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(அரச தொழிலும் விரும்பத்தக்கது)

**070 683 3711**

(CS/51193)AH-1

---

## வேலையாள் தேவை

தோட்ட வேலை தெரிந்தவர் தேவை. 50 வயதுக்கு மேற்பட்டவர் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 977 3286**

---

## வீட்டுப் பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு: **077 259 8284**

---

# வேலைவாய்ப்பு

**கல்விசாரா ஊழியர்கள்**

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்புக்களுக்கு வெற்றிடம் இருப்பதால் 55 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

1. கிறிஸ்தவ விடுதி மேற்பார்வையாளர் - முழுநேரம்
2. சமையல் மேற்பார்வையாளர் - முழுநேரம்
3. அலுவலக ஊழியர்

**கல்விசார் ஊழியர்கள்**

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்குட்பட்ட பெண்பட்டதாரிகள்.

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - ICT English Medium
2. இணைந்த கணிதம் - English Medium
3. கணக்கீடு - English Medium
4. ஆரம்பப்பிரிவு (க.பொ.த உயர்தரம் சித்தி)

**இடம் : உடுவில் மகளிர் கல்லூரி.**
**காலம் : 17.07.2023 - 21.07.2023**
**நேரம் : காலை 8.30 - மதியம் 1.00**

**Ms.R.M.Kulendran**
**Principal**

(CR/37232)AH-1

---

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா தம்பையா

பிறப்பு 20.07.1934 — இறப்பு 09.07.2023



தென்மராட்சி மட்டுவிலை பிறப்பிடமாகவும், மட்டுவில், மலேசியா, மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தம்பையா அவர்கள் கடந்த (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை மரணம் அடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் முதலிச்சி தம்பதியரின் அன்பு மகளும், சிதம்பரி சிதம்பரம், சிதம்பரிசோதி, பண்டாரி முத்துப்பிள்ளை, சுப்பர்பரமு, சுப்பர்சின்னத்தம்பி ஆகியோரின் இளைய சகோதரியும், புஸ்பமலர், லீலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலசிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மருமகன் சிவபாலசிங்கம் அவர்களின் மாவிட்டபுர இல்லத்தில் நாளை (12.07.2023) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று, அன்று காலை 9.00 மணியளவில் அவரின் பூதவுடல் மருமகன் பாலசுப்பிரமணியத்தின் மட்டுவில் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கொட்டையடி தூபி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25505)A-1

---

## சொற்பொழிவு

யாழ்., ஜுலை 11

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில், ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள சிறப்புச் சொற்பொழிவை சிவநெறிச் செம்மல் செ.பாலச்சந்திரன் 'தடைகள் நீக்கி வெற்றிகளைத்தரும் கோளறுப் பதிகம்' என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்திக்கடல்...

மீட்டதாக அரசாங்கம் அறிவித்த நந்திக்கடல் பகுதியை சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.
இலங்கையில் கரையோரப்பகுதிகளில் உள்ள கவர்ச்சியான இடங்களைக் கண்டறிந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அவற்றை சுற்றுலாத் தளங்களாக மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.
இதன்படி கரையோரப்பகுதிகளில் 24 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றுள் நந்திக்கடல் கடற்பகுதியும் உள்ளடங்கியுள்ளது. உப்புவெளி, சாம்பல் தீவு, நாயாறு ஆகிய கடற்கரைப் பகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. (அ-ஒ.44)

## துப்பாக்கியால்...

பெயரிடப்பட்டுள்ள இளைஞன் ஒருவனைச் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.
உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இடியன் துவக்கு மூலம் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதன் போதுஇளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பாலிநகர் பகுதியை சேர்ந்த மகேந்திரன் டிலக்சன் (வயது - 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.
இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு பாலிநகர் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த இருவரில் ஒருவர் மல்லாவி ஆதார மருத்துவமனையிலும் மற்றையவர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில், வாள்வெட்டுக்கு இலக்கான தரப்பினர், பழிவாங்கும் நோக்கத்துடன் இந்த துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டிருக்கலாம் என்ற கோணத்தில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் உயிரிழந்த இளைஞன் கொலை வழக்கொன்றில் சந்தேகநபராகவும் பெயரிடப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.
உயிரிழந்த இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனைகளை சட்டமருத்துவ நிபுணர் வாசுதேவா மேற்கொண்டார். அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ.19)

## நீதிமன்றம்...

யுள்ளது. அத்துடன் அவரது கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மு.ப. 10.30 மணியளவில் முல்லைத்தீவு நீதிமன்ற முன்றிலில் அடையாள கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ.26)

**உடனடி வேலைவாய்ப்பு**
யாழில் புதிதாக திறக்கப்படவுள்ள கம்பனிக்கு, முகாமையாளர், அலுவலக உதவியாளர், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை.
076 112 4145

# மரண அறிவித்தல்



## திருமதி சின்னம்மா கந்தையா

சாவகச்சேரி அல்லாரையை பிறப்பிடமாகவும் அரசடி ஆசிரியர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கந்தையா அவர்கள் கடந்த (09.07.2023) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாபதி கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், உலகேஸ்வரன், சண்முகதாஸ், உருத்திரகோடீஸ்வரன், சந்திரதாஸ், வசந்தநாயகி, செல்வநாயகி, யோகீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் மகேஸ்வரி, சரஸ்வதி, செல்லம்மா காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசேஸ்வரி, நல்லம்மா, கௌரி, மலர்விழி, காலம்சென்ற பாலசுப்ரமணியம், தர்மலிங்கம், லலிதாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், குகாசினி, காலம்சென்ற தயாநிதி, கிரிசாந்தினி,தர்சினி, கஜந்தன், சுதாஜினி, சுபாஜினி, சுதாகரன், சுகதாஸ், திவாகரன், பிரஷாந்தன், ஆர்த்திகா, கீர்த்தனா, கிருசாந்த், கீர்த்திகா, கௌதமி, மாதுங்கன், நர்த்தனன், யதூஷிகன், வினிதா, தக்ஷினி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2023) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.
077 833 0105, 076 101 0647

தகவல்
குடும்பத்தினர்.

(CR 37225) A-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன்





கடந்த 11.06.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அஞ்சலி, ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி, Eமெயில் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் அஞ்சலி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.07.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**
**076 288 2724**

**சிவசக்தி கோயிலடி,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**

(CR 37235)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்க்காப்பும் குடமுழுக்கும்

வரலாற்றுச் சிறப்புமிக்க சுழிபுரம் கண்ணைக்கொத்திக் காக்கைப் பிள்ளையார் என அழைக்கப்படும் சுழிபுரம் பறாளாய் ஈசுவர விநாயகர் ஆலயத்தின் எண்ணெய்க் காப்பு கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 6ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெற்றது.
கும்பாபிஷேகம் கடந்த 7ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெற்றது. (ய-125)





புங்குடுதீவு மத்திய கல்லூரியின் அதிபராக வேலணையைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி வினோதன் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ய)



அராலி மேற்கு நீளத்திக் காடு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் 7ஆம் திருவிழாவான வேட்டைத்திருவிழா கடந்த 26ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெற்றது. (ய-27)



## சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் 20 ஆவது ஆண்டு பூர்த்தி விழா கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பாடசாலையின் 20 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவை முன்னிட்டுச் சிறப்பிதழ் வெளியீடு மற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் செய்த நற்பணிகள் மற்றும் அவரது வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய *Dr Aru Thirumurugan: A Spiritual Giant* எனும் தலைப்பிலான ஆங்கில மொழியிலான நூல் வெளியீடு என்பன இடம்பெற்றன.
நிகழ்வில் கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் அதிபராக கடந்த இருபது வருட காலமாக கடமையாற்றி வரும் திருமதி.கலைவாணி குகதாசன் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சேவையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
இறுதியாக குறித்த பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ய-66)



ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் வேட்டைத் திருவிழா கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏழாலை களபாவோடை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது. (ய-66)

## சந்நிதியான் ஆச்சிரம உதவிகள்



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பல்வேறு செயற்றிட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
இதன்படி, கிழக்கு மாகாணம் திருகோணமலை செல்வநாயகபுரம் பிரதேச மருத்துவமனைக்கு 5 இலட்சத்து 5ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் அண்மையில் வழங்கப்பட்டன.
புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம்-10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு ரூபா 45 ஆயிரம் வழங்கப்பட்டதுடன் தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் பொருத்தப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்டது. குறித்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் மற்றும் தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கிவைத்தனர். (ய-27)

## வாடகை செலுத்தாத 130 கடைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

வவுனியா மாநகரசபையால் நிலவாடகை செலுத்தாத 130 வர்த்தக நிலையங்களுக்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.
வவுனியா நகரசபையின் கீழ் 447 கடைகள் காணப்படுகின்றன. 2022ஆம் ஆண்டு தொடக்கம் பல வர்த்தக நிலையங்கள் நில வாடகை செலுத்தாத நிலையில் நகரசபையால் இந்தச்செயற்பாடு அதிரடியாக நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
முதற் கட்டமாக 86 கடைகளும் அண்மையிலும், 44 கடைகளுக்கு நேற்றும் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதுடன், ஏனைய கடைகளுக்கு எதிர்வரும் நாள்களிலும் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்படும் எனத் தெரிவிக்கப்படுள்ளது.
மாநகரசபையின் அனுமதியின்றி சிவப்பு அறிவித்தலை அகற்றிய வர்த்தக நிலையங்களின் மீது வழக்குப்பதிவு செய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதேவேளை - சிவப்பு அறிவித்தல் ஒட்டிய பின்னர் 38 இலட்சத்து 6 ஆயிரத்து 921 ரூபா வாடகை மாநகரசபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. (அ-ஓ.18.110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபோதையின்...

நிஷாந்தன் (வயது - 32) என்பவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இருவரும் ஒன்றாக மதுபானம் பருகியுள்ளனர். இருவர் மீதும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டு உள்ளதாகவும் இது தொடர்பான கருத்து முரண்பாட்டிலேயே சந்தேகநபர் சவளால் எடுத்து தாக்கியதில் நிஷாந்தன் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக தமது முதற்கட்ட விசாரணையில் அறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலை நடந்த இடத்தை சோதனை செய்ததில், மதுப் போத்தல்கள், தாக்குதலுக்குப் பயன்படுத்திய சவள் மற்றும் இறந்தவரின் சில பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கொலையின் பின்னர் சந்தேகநபர் அந்தப் பகுதியிலிருந்து தலைமறைவாகியிருந்ததாகவும் நேற்றுக்காலை ஈச்சங்குளம் பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - உடற்கூற்றுப் பரிசோதனைகளை சட்டமருத்துவ நிபுணர் வாசுதேவா முன்னெடுத்தார். அதன் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ,18)

## தாக்குதலின்...

ராஜ்குமார் (வயது - 35) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்றில் நேற்று முன்தினம் இரவு கத்திக்குத்துக்கு இலக்கான அவர் உடனடியாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார்.

உறவினர்களான இரு இளைஞர்களுடனும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும், ஒருவர் ராஜ்குமாரைப் பிடிக்க மற்றையவர் கத்தியால் குத்தியதாகவும் முறைப்பாட்டில் மனைவி தெரிவித்துள்ளதாக இளவாலைப் பொலிஸார் குறிப்பிட்டனர். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 21 மற்றும் 22 வயதான இரு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை - ஊர்மக்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் வேறுவிதமாகக் கருத்துத் தெரிவித்தனர்.

ராஜ்குமார் தனது ஊரிலுள்ள ஒருவரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சென்று முரண்பட்டதாகவும் வீட்டிலிருந்தவர்கள் மிளகாய்த்தூள் கரைசலை அவர் மீது தெளித்ததாகவும், அதனைத் தொடர்ந்து அங்கிருந்தவர்களால் '119' என்ற பொலிஸ் அவசர இலக்கத்துக்கு இது தொடர்பில் முறையிடப்பட்டதாகவும் ஊரவர்கள் தெரிவித்தனர். அங்கு வந்த பொலிஸார் இரு தரப்பினரையும் விலக்கிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர் எனவும், அதன் பின்னர் தனது வீட்டுக்குச் செல்லாமல் மைத்துனர் முறையிலான ஒருவரது வீட்டுக்குச் சென்ற ராஜ்குமார் அங்கு குளித்துவிட்டு இருக்கும்போதே இளைஞர்களால் கொல்லப்பட்டதாகவும் ஊர்மக்கள் குறிப்பிடுகின்றனர்.

(அ-ஒ,27,125)

## சரத் வீரசேகர...

வடக்கு மாகாணத்திலுள்ள சட்டத்தரணிகள் இன்று எந்த வழக்கு நடவடிக்கைகளிலும் பங்குகொள்ளமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறிச் சட்டவிரோதமாக விகாரைக்கட்டுமாணங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதற்கு அமைவாக அண்மையில் அந்தப் பகுதிக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிபதியின் கள ஆய்வு நடவடிக்கையில் குறுக்கிட முயன்றபோது, அங்கிருந்து நீதிபதியின் உத்தரவுக்கு அமைய அகற்றப்பட்டார்.

இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை கடுமையாகச் சாடும் வகையில் நாடாளுமன்றத்தில், சரத் வீரசேகர கருத்து வெளியிட்டிருந்தார். தங்களை அங்கிருந்து வெளியேற்ற நீதிபதிக்கு அதிகாரம் இல்லை என்றும், இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நீதிமன்றத்தையும், நீதிபதியையும் அவமதிக்கும் வகையில் தொடர்ச்சியாகக் கருத்துக்களை வெளியிட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் இன்று வழக்கு நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள் பங்கு கொள்ள மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளை அவமதிக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்து வரும் சரத் வீரசேகர மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-எ-26)

## இரண்டாவது...

அமாவாசைகளில் இரண்டாவதாக வருகின்ற அமாவாசையே ஆடி அமாவாசை விரதநாளாகும்- இவ்வாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

ஆடி மாதத்திலே இரண்டு அமாவாசைகள் வருகின்றன. அதில் எது ஆடி அமாவாசை விரதம் என்ற குழப்பத்தில் இந்துக்கள் உள்ளனர். பஞ்சாங்கத்தில் இரண்டும் ஆடி அமாவாசை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வருவது முதல் தடவை அல்ல.

அடுத்த மாதம் 15ஆம் திகதி இரண்டாவதாக வருகின்ற அமாவாசையை விரத நாளாகக் கொள்வதுதான் சரி. இந்த நாளில் விரதமிருந்து தர்ப்பணங்கள் செய்து கொள்ளலாம் - என்றுள்ளது.

(அ-ஒ,110)

## கணக்காளரைக்...

அவரிடமிருந்து 13 இலட்சம் ரூபாவை பறித்த பின்னர் விடுவித்துள்ளனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காணி விற்பதாகக் குறிப்பிட்டு, வாங்கிய பணத்தை கணக்காளர் மீள ஒப்படைக்காததையடுத்தே அவரைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரியாலை, நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த 69 வயதான கணக்காளரே கடத்தப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு காணியை விற்பதாக குறிப்பிட்டு, ரூ.13 இலட்சம் பெற்றதாகவும், அவர் காணியை விற்காததுடன், பணத்தை மீள வழங்காமல் இழுத்தடித்து வந்துள்ளார். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை காணி பார்க்க வருவதாக வேறொருவர் மூலம் நாடகமாடி, கணக்காளரை கல்வியங்காட்டுப் பகுதிக்கு வரவழைத்துள்ளனர். அங்கு வைத்து அவரை வாகனத்தில் கடத்திச்சென்றுள்ளனர். அவர் கொடுக்க வேண்டிய ரூ.13 இலட்சம் பணத்தையும் அவரது வங்கிக் கணக்கிலிருந்து மீளப் பெற்ற பின்னர், அன்றிரவே கல்வியங்காட்டில் அவரை இறக்கி விட்டுள்ளனர்.

உடனடியாகவே அவர் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்தார். கடத்தியமை, தாக்கியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பெண்ணையும், மேலும் 4 பேரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-ஒ,125)

## முன்னணியின்...

அனுப்பவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்துக்கு முன்னதாக இந்தியப் பிரதமர் மோடிக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக்கோரும் கடிதத்தை அனுப்புவதற்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்தது. அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களின் கையெழுத்துடன் அனுப்புவதற்கு முடிவு செய்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனின் ஒப்பத்துக்காக கடிதம் ஒப்படைக்கப்பட்டது. அவர் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவதை மாத்திரம் குறிப்பிட்டுள்ளமையால் அதனை ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சமஷ்டியை வலியுறுத்தி கடிதம் அனுப்பிய தைப்போன்று, அந்தக் கோரிக்கையை உள்ளடக்கி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனியாக அனுப்புவதை சம்பந்தன் விரும்பியதையடுத்து தயாரிக்கப்பட்டுள்ள புதிய கடிதம் விரைவில் அனுப்பப்படும் என்று தெரிகின்றது.

இதேவேளை - யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் கொன்சியூலர் ஜெனரல் ராகேஷ் நட்ராஜ்ஜிடம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்தியப் பிரதமருக்கான கடிதம் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனால் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில், ஒற்றையாட்சி கட்டமைப்புக்குள் உள்ள எந்தவொரு முன்மொழிவையும் தமிழ் மக்கள் நிராகரிப்பதை இந்தியாவை ஆதரிக்க வேண்டும், அதற்கு பதிலாக தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து பாதுகாக்கும் மற்றும் தமிழ் மக்களின் பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையை உணர அனுமதிக்கும் இலங்கைக்கான கூட்டாட்சி அரசமைப்பை ஆதரிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ,5)

## முகமூடி...

ரர்கள் மூவர் மீது வாளால் வெட்டியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

வலந்தலைச் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றும் ஊழியருக்கும், வெளிப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞனுக்கும் இடையே கடந்த வருடம் எரிபொருள் நெருக்கடியான காலப்பகுதியில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த ஊழியரும் இளைஞரும் நேற்றுமுன்தினம் மாலை காரைநகர் பகுதியில் வாக்குவாதப்பட்டுள்ளனர். இறுதியில் கைகலப்பும் இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு ஊழியர் கடமையிலிருந்தபோது, மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகட்டையும், முகத்தையும் மறைத்து வந்த வன்முறைக்குழு ஊழியர் மீது வாளால் தாக்கியுள்ளது. தாக்குதலை தடுக்கமுயன்ற ஊழியரின் இரு சகோதரர்கள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு அந்தக்குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர்.

28 வயதான ஊழியரின் மூத்த சகோதரர் யாழ். போதனா மருத்துவமனையிலும், 25 வயதான ஊழியரும் அவரது 22 இளைய சகோதரரும் காரைநகர் வலந்தலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ,125)

## தேசியப்...

ஒவ்வொரு கல்வி அமைச்சரின் விருப்பத்தின் அடிப்படையிலோ அல்லது சில அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலோ திடீரென தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால், அதன் ஊடாக தரமான கல்வி முறையொன்று தோற்றுவிக்கப்பட்டதாகக் கூற முடியாது - இவ்வாறு கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வி அமைச்சு, மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. அந்நாடுகளில் கல்வி அமைச்சு மாகாண அமைச்சரின் கீழேயே உள்ளது. இவ்வாறான கல்வி முறையால் அந்நாட்டுக் குழந்தைகளின் கல்வி உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் மத்திய அரசிடமே கல்வி அமைச்சு உள்ளது.

எமது நாட்டில் 399 பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகள் அனைத்தும் மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ளன. 2021ஆம் ஆண்டு ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோது, இந்நாட்டில் 17 தேசிய பாடசாலைகளே இருந்தன. ஒரே இரவில் 28 தேசியப் பாடசாலைகள் உருவாக்கப்பட்ட சகாப்தம் வரலாற்றில் உள்ளது. ஆனால், தற்போது கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைக்குப் பதிலாக மாணவர்களை மையப்படுத்திய கல்வி முறையொன்று தேவை' - என்றார். (அ-ஒ,இ)

## ஹன்சார்ட்டிலிருந்து...

வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'நீதிபதி தொடர்பில் தனிப்பட்ட விமர்சனம் முன்வைக்க முடியாது. நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளைக்கு அமைவாக அடுத்த அமர்வில் வீரசேகர தெரிவித்த கருத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

(அ-ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் வீரசேகரவின் கருத்துக்கு இந்து மகாசபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் மிக மோசமான இன, மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகாசபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் நீதிபதி என விளித்து அச்சுறுத்தும் எச்சரிக்கை வசனங்களை நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டமை மிக மோசமான இனவாதம். அது மட்டுமன்றி நீதிமன்றத்தின் உயரிய மாட்சிமைக்கு பங்கம் விளைக்கும் அதி தவறான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்த வழிகோலுகின்ற வகையில் அவரது உரை அமைந்திருக்கின்றது.

ஆதிகாலம் தொட்டு தமிழர்கள் வழிபட்டு வந்த ஆதி சிவன் கோவிலின் திரிசூலம் பற்றியும் மிகத்தவறான கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே மிகத் தொன்மையான ஆதி சிவன் கோவில் அமைந்திருந்ததையும் மிகப் பெரிய ஆவுடையார் உள்ளிட்ட சிவலிங்க பாகங்கள் நந்தி போன்றன மீட்கப்பட்டு இருந்ததையும் மேல்நாட்டு தொல்லியல் அறிஞர்களான எச்.பி.பெல், லூயிஸ் ஆகியோர் கடந்த நூற்றாண்டிலேயே அகழ்வாராய்ச்சிகளுடன் உறுதிப்படுத்தி இருந்தனர். இன்று முற்றிலும் சைவத்தமிழர் வசிக்கும் இடத்தில் அவர்களின் வழிபாட்டுரிமைக்கு சவால் விடும் செயற்பாடுகளில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் அடாவடியாக ஈடுபட முனையும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீரசேகரவுக்கு நீதிமன்ற உத்தரவுகள் விசனத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

அதன் வெளிப்பாடே நாடாளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து நீதிபதியை இனவாத நோக்கில் அவமதித்து அச்சுறுத்தும் வார்த்தை பிரயோகம் அடங்கிய அவரது உரையாகும்.

இன, மத நல்லிணக்கத்தையும் உயரிய நீதிமன்ற மாண்பையும் காக்கும் வகையில் நாட்டின் சகல முற்போக்கு சக்திகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களைப் பதிவு செய்ய வேண்டுவதுடன் சபாநாயகர் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் சைவத்தமிழ் மக்கள் சார்பாகவும் நீதிமன்ற மாண்பை மதிக்கும் நாட்டின் பிரஜைகள் சார்பாகவும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஓ,125)

## மோடியைச் சந்திக்க முன்னர் எங்கள் கருத்தையும் கேளுங்கள்

### வடக்கு மீனவர்கள் மன்றாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இந்தியப் பிரதமர் மோடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சந்திப்பதற்கு முன்பாக எமது கருத்துக்களையும் அவர்கள் கேட்கவேண்டும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் ஆலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தியாவுக்குச் சென்றபோது, இந்திய மீனவர்கள் தற்செயலாகவே இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதாகத் தெரிவித்ததாக அறிகின்றோம். தற்செயலாக ஒரு தடவை, இரண்டு தடவை வரலாம். ஆனால் வருடாந்தம் இந்த அத்துமீறல் அதிகரிக்கின்றது. வடக்கு மீனவர்களின் அவலம் தெரியாமல் கருத்துத் தெரிவிக்கக்கூடாது.

இந்தியா ஊடாக அரபிக்கடலில் மீன்பிடிப்பதற்கு சிங்கள மீனவர்களுக்காக இந்தியப் பிரதமர் மோடியிடம் ஜனாதிபதி ரணில் மற்றும் அமைச்சர் டக்ளஸ் பேச்சு நடத்தவுள்ளதாக அறிகின்றோம். அவர்கள் அதற்கு முன்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் எம்முடன் பேசி எமது கருத்தையும் உள்வாங்கி இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடவேண்டும் - என்றார். (அ-ஓ,125)

*ரணில் - டிரான் அலஸ்*

## கயிறுழுப்பால் தாமதமாகும் பொலிஸ்மா அதிபர் நியமனம்

கொழும்பு, ஜூலை 11

மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அடுத்த பொலிஸ் மா அதிபராகத் தெரிவு செய்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோருக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகவே பொலிஸ் மா அதிபராக சி.டி.விக்ரமரத்னவுக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்க, ஜனாதிபதி விரும்பவில்லை. எனினும், அவரையே அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்குமாறு பொதுப்பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இணக்கப்பாடு ஏற்படாத நிலையில், நேற்றுமுன்தினம் ஜனாதிபதியும், பொதுப்பாதுகாப்பு அமைச்சரும் சந்தித்து, இந்த விவகாரத்தில் இறுதி முடிவெடுக்க அவகாசம் தேவைப்பட்டதால், சி.டி. விக்கிரமரத்னவுக்கு சேவை நீடிப்பு வழங்குவதற்கான முடிவுக்கு வந்துள்ளனர்.

சி.டி.விக்ரமரத்னவுக்கு கடந்த மார்ச்சில் 3 மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. அந்த நீடிப்பு கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதியுடன் முடிந்தது. அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொலிஸ்மா அதிபரின் பெயரைப் பரிந்துரைக்கத் தவறிய போதிலும், கத்தோலிக்க திருச்சபை மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகிய இரு தரப்பிலிருந்தும் கடும் கரிசனைகளுக்கு மத்தியிலும், அதனை மீறி மேல்மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்குமாறு அமைச்சர் அலஸ் முதலில் ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஓ,இ)



காரைநகர் - ஊர்காவற்றுறை

## படகுப் பாதை மீள ஆரம்பம்

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையேயான படகுப்பாதையின் திருத்தப் பணிகள் நிறைவடைந்து நேற்றுத் திங்கட்கிழமை முதல் போக்குவரத்துச் சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

படகுப் பாதை பழுதடைந்தமை தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து உரிய அதிகாரிகள் ஊடாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிலையில் திருத்தப்பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று முதல் மீண்டும் படகுப் பாதைச் சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ,27,66)


**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் திருமண மண்டபத்துக்கு அபிவிருத்தி முகாமையாளர் மற்றும் சாரதி தேவை. (CS/51195)AH-1

076 197 8406

**வேலையாள்கள் தேவை**

பளையில் இயங்கி வரும் வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 967 6028
021 491 3633

**DHL துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் 3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna.

T.P: 0777 55 45 28

**CANADA VISA**

1) Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய் . தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) Visitor Visa- கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) Student Visa - IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் (Sep 2023 and Jan 2024)
4) Work and Study Program - Course Fee after Visa
மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Contact: Visa Consultant, 136 Adiyapatham Road, Thirunelvely, Jaffna T.P: 077 038 5584

**மணமகன் தேவை**

01. கொக்குவில் - அல்வாய் இந்து கௌரவ குடும்பம் (V). 1993, ரோகினி, Phd, Assistant Lecturer, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33627
02. கைதடி, இந்து, கௌரவகுடும்பம் (V). 1991, பூசம், MSc, Research Assistant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34245
03. புலோலி - கரவெட்டி, இந்து, கௌரவகுடும்பம் (V). 1994, திருவாதிரை, Book keeper, Unior Accountant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34097
04. உரும்பிராய், இந்து, கௌரகுலம் (V). 1993, திருவோணம், Masters in Biotechnology, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33574
05. தெல்லிப்பழை - கோண்டாவில், இந்து, கௌரவகுடும்பம் (V), 1993, அச்சுவினி, BSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33363
06. பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து கௌரவகுடும்பம் (V). திருவாதிரை, MSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32904
07. தெல்லிப்பழை - உரும்பிராய், இந்து கௌரவகுடும்பம் (V), மிருகசீரிடம், BSc (Hons), MBA, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 31812

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 15பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* சுன்னாகம் சாவகச்சேரி செல்லும் அரச, தனியார் பேருந்துகள் பயணிக்கும் பிரதான வீதி.
* 1 பரப்பு ஒரு லட்சத்தி ஐம்பதுஆயிரம் மட்டும்.
பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.